

கள்ளக்குறிச்சியில் தமிழ்நாடு கிறிஸ்துவ சபையின் கூட்டமைப்பு அறிமுக கூட்ட விழா ஏ.எல்.சி சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது, இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, தா.உதயசூரியன் எம்.எல்.ஏ ,கள்ளக்குறிச்சி எம்.பி. தே.மலையரசன் ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆயிங்குடி துணை சுகாதார நிலையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில், ரூ.3.56 கோடி செலவில் 11 புதிய மருத்துவக் கட்டிடங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று (21.09.2024) திறந்து வைத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் அ. கோ.ராஜராஜன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை இருமடங்கு உயர்த்திய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் நன்றி!

## சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை செப்.23-

மாற்றுத்திறனாளிகளுக்கான வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை அறிவித்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு முன்னேற்ற சங்க மாநிலத்தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் நன்றி அறிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு.

முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில்வைத்துகொண்டு பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை அறிவித்து செயலாக்கம் செய்ததை இன்றும் நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறோம்.

இந்நிலையில் முதலமைச்சராக பொறுப்பேற்ற தலைவர் மு.க.ஸ்டாலின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் குடிகொண்டு வருகிறார் என்பதை மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், மாற்றுத்திறனாளி மாணவர்கள் மீது பெரிதும் கவனம் விதமாக மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித்தையை இரு மடங்காக உயர்த்தியும்,ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஆண்டிற்கு ஆயிரம் ரூபாயும், ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை 3000 ரூபாயும், ஒன்பது முதல் 12ம் வகுப்பு வரை ஆறாயிரம் ரூபாயும், தொழில் கல்வி, முது நிலை பட்டப்படிப்பிற்கு ஆண்டிற்கு 7000 ரூபாயும் உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பித்ததுடன்,

மாற்றுத்திறனாளி மாணவர்களின் சிறப்பு கல்வியினை ஊக்குவிக்கும் பொருட்டு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை விரிவுபடுத்தி ஆராய்ச்சி படிப்பு (பி.எச்டி) மேற்கொள்ளும் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு ஆண்டு தோறும் 50 மாணவர்களுக்கு தலா ஒரு லட்ச ரூபாய் வழங்கும் வகையில், ரூபாய் 50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகை திட்டம் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு மாற்று திறனாளிகள் சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதா ஜீவன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாற்றுத்திறன் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையை இரு மடங்குகளாக உயர்த்தி வழங்கி உள்ள நிலையில், மாணவர்களை கற்றல் திறன் மேம்பாட்டு ஆராய்ச்சி படிப்பில் சேரக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற நம்பிக்கை மாற்றுத்திறனாளிகளிடையே எழுந்துள்ளது என்பதை மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம் .

மேலும் மாற்றுத்திறனாளிகளின் காவலர் தலைவர் கலைஞர் வழியில் பொற்கால ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு எண்ணற்ற நலத்திட்டங்களை தொடர்ந்து வாரி வழங்கும் வரும் நிலையில், மாற்றுத்திறனாளி அரசு ஊழியர்கள்,ஆசிரியர் பெருமக்களுக்கு பதவி உயர்வு பெற 4% இட ஒதுக்கீட்டை அமுல்படுத்த வேண்டும் எனவும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.



திருவாரூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கான மாணவரணி நிர்வாகிகளுக்கான நேர்காணலை மாநில மாணவரணி துணை செயலாளர்கள் மன்னை.த.சோழராஜன், தமிழ்.கா.அமுதரசன் ஆகியோர் பங்கேற்று நடத்தினர். நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் தலைமையில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.பகலவன் மற்றும் துணை அமைப்பாளர்கள் மதி.நெல்சன் மண்டேலா, மதி.முத்துகுமார், ஜா.நூருல் அமீன், வை.யோகபாலன், எஸ்.சகுந்தலாதேவி ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

# அடுக்குமாடி குடியிருப்புத் திட்ட அனுமதிக்கு ரூ.27 கோடி லஞ்சம்!

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் உள்பட 11 பேர் மீது வழக்குப் பதிவு!

சென்னை, செப். 22-

சென்னையில் தனியார் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டத்துக்கு அனுமதி வழங்க ரூ.27.9 கோடி லஞ்சம் பெற்றதாக முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரும், தற்போதைய எம்.எல்.ஏ.வுமான ஆர்.வைத்திலிங்கம், அவரது இரு மகன்கள் உள்பட 11 பேர் மீது ஊழல் தடுப்புப் பிரிவு வழக்குப் பதிவு செய்தது.

தமிழகத்தில் 2011 முதல் 2016- ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்தவர் வைத்திலிங்கம். தற்போது முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளரான வைத்திலிங்கம், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தொகுதி எம்.எல்.ஏ. வாக உள்ளார்.

சென்னை பெருங்களத்தூரில் ஸ்ரீராம்குழு மத்துக்குச் சொந்தமான ‘ஸ்ரீராம் பிராபர்ட்டீஸ் அன்ட் இன்ப்ராஸ்டெரக்சர் பிரைவெட் லிமிடெட்’ என்ற நிறுவனம் 57.94 ஏக்கர் நிலத்தில் 24 பிளாக்குகளாக 1,453 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை கட்ட திட்ட அனுமதி கோரி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் (சி.எம்.டி.ஏ.) 2013 ஆம் ஆண்டு விண்ணப்பித்தது.

ஆனால், அந்தத் திட்டத்துக்கு 2 ஆண்டுகளுக்கு மேலாக அனுமதி வழங்காத நிலையில், 2016ஆம் ஆண்டு திடீரென அனுமதி வழங் கப்பட்டதாம். இந்த அனுமதி வழங்குவதற்கு பெருமளவு லஞ்சம், அப்போதைய அமைச்சரான வைத்திலிங்கத்துக்கு வழங்கப்பட்டதாக சென்னையைச் சேர்ந்த அறப்போர் இயக்கம் குற்றஞ்சாட்டியது.

**ரூ.27.9கோடி லஞ்சம்:**

இது தொடர்பாக அந்த இயக்கம், தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவுக்கு வழங்கிய புகார் மனுவில் கூறப்பட்ட தகவல்கள்:

ஸ்ரீராம் நிறுவனம் அங்கு குடி யிருப்பு கட்ட திட்ட அனுமதிக்காக வைத்திலிங்கத்துக்கு ரூ.27.9 கோடி லஞ்சமாக வழங்கியுள்ளது. அந்த பணம் அந்த குழுமத்துக்கு சொந்தமான ‘பாரத் கோல் கெமிக்கல் பிரைவெட் லிமிடெட்’ மூலம் வைத்திலிங்கத்தின் மகன்கள் பிரபு, சண்முகபிரபு, உறவினர் பன்னீர்செல்வம் ஆகியோர் இயக்குநர்களாக இருந்த ‘முத்தம்மாள் எஸ்டேட் பிரைவெட் லிமிடெட் ‘ என்ற நிறு வனத்துக்கு கடனாக வழங்கப்பட்டது போல காட்டப்பட்டுள்ளது. ஆனால், முத்தம்மாள் நிறுவனத்துக்கு கடன் வழங்கிய பாரத் நிறுவனம், தாங்கள் வாங்கிய ரூ.280 கோடி கடனை திருப்பி செலுத்த முடியாமல், தங்களுடைய சொத்துகளை விற்று செலுத்துவதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. மேலும், வேறு சில தனியார் நிறுவனங்கள் வணிகத்துக்காக பாரத் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டதுபோல ரூ.27.9 கோடி கொண்டு வரப்பட்டுள்ளது. கடன் பெற்ற முத்தம்மாள் நிறுவனம் 2014ஆம் ஆண்டில் இருந்து ஒரு ரூபாய் கூட வணிகம் செய்யவில்லை என வருமானவரித் துறையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது.



சேலம் மாநகரம் அம்மாபேட்டை அண்ணா நற்பணி மன்றத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 116 வது பிறந்த தினத்தை யொட்டி அண்ணா நற்பணி மன்றத் தின் சார்பில் 1,000 பள்ளி குழந்தைகளுக்கு நேட்டு புத்தகம் இனிப்புகளை மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்..ஏ. வழங்கினார். உடன் மாவட்ட நிர்வாகிகள்.ஜி. கே. சுபாசு, மு.கார்த்திகேயன், கே. ஆர்.முருகன்.கே.டி.ஆர். தனசேகரன்.கேபிள் ராஜா, அண்ணா நற்பணி மன்ற செயலாளர். கே.குமாரசாமி, ‘பொட்டு ஞானசேகர். பொட்டு.சேகர் .கலைசெல்வன், ஆசிரியர் செவ்வேள். பொட்டு பாலா, பேர்லாண்ட்ஸ் ரவிகுமார், ஆர்.ஏ.ஆர். துரைசாமி, அருண்ராஜ். ஆகியோர் இருந்தனர்.

## சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகள் ஐந்து பேர் நிரந்தர நீதிபதிகளாக நியமனம்!

புதுடெல்லி, செப். 22 –

சென்னை உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதிகளாக உள்ள விக்டோரியா கவுரி, பி.பி. பாலாஜி, கே.கே. ராமகிருஷ்ணன், ஆர்.கலைமதி மற்றும் கே.ஜி.திலகவதி ஆகியோரை நிரந்தர நீதிபதிகளாக நியமிக்க கொலிஜியம் அண்மையில் பரிந்துரைத்திருந்தது. இதனை ஏற்றுக் கொண்டு ஐந்து பேரையும் சென்னை உயர் நீதிமன்ற நிரந்தர நீதிபதிகளாக நியமித்து குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார். அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சமீம் அஹமத்ஜ, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு இடமாற்றியும் குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

### அரியலூர் மாவட்ட

## மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், செப், 22

அரியலூர் மாவட்ட மகளிர் அணி , மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வு கூட்டம் மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்ச சா.சி.சிவசங்கர், மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கலந்துகொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றியம், நகரங்களில் புதிய மகளிர் அணி உருப்பினர்களை சேர்க்கவேண்டும், அதேபோல இளம்பெண்கள் பயிற்சி பாசறை அமைப்பது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. உறுப்பினர் சேர்க்கை மேலும் அதிகப்படுத்துவது குறித்து மகளிர் அணி பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள், தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், ரெ.அசோக் சக்கரவர்த்தி, ஆர்.கலியபெருமாள், வீ. எழில்மாறன், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பேரூர் கழக செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட மகளிர் அணி அமைப்பா ளர்கள் பானுமதி ராஜேந்திரன், மீனா சாமிநாதன், மாவட்ட மகளிர் அணி தலைவர் விஜயலட்சுமி, மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் ராணி சந்திரசேகர், காந்திமதி, பர்வதவர்தினி,இராணி,மலர்விழி ரஞ்ஜித்குமார், எழிலரசி, சித்ரா, மல்லிகை சுந்தரம், பேனிதா, இலக்கியா, மற்றும் மகளிர் அணி,மகளிர் தொண்டணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. வாசுதேவன்

**செப்டம்பர் 23 (2023)**



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

செவ்வாய்ப்பேட்டை கிளை செயலாளராகவும், அவைத்தலைவராக பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறவழிப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.


**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோபி ஜி. வெங்கிடு

**செப்டம்பர் 23 (2020)**



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழக கொள்கையில் ஈர்க்கப்பட்டு பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினர். தீவிர சுயமரியாதைக்காரர்.

வட்டச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட இலக்கிய அணி தலைவர் – மாநில விவசாய அணி இணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, தலைமைக் கழக பேச்சாளராக தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

கோபி நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியதோடு, 1996ஆம் ஆண்டு கோபி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1952–ல் தார்ச்சட்டி ஏந்தி இந்தியை அழித்த போராட்டத்தில் துவங்கி, 1964 இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவித்தவர்.

“பொதுமக்களின் சேவகராகத் திகழ்ந்த – கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவரான ஜி.பி.வெங்கிடு அவர்களின் மறைவு கழகத்திற்குப் பேரிழப்பாகும். ” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**